| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 13,080,650 | 11,153,665 | 11,014,059 | 139,606 | 14,720,590 | 10,058,373 | 10,058,373 | - |
| உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,820,000 | 1,245,580 | 1,245,580 | - | 1,868,500 | 1,408,855 | 1,408,855 | - |
| ஏனைய வருமானம் | 5,932,000 | 9,455,748 | 9,455,748 | - | 6,521,000 | 9,069,691 | 9,069,691 | - |
| கூட்டுத்தொகை | 20,832,650 | 21,854,993 | 21,715,387 | 139,606 | 23,110,090 | 20,536,919 | 20,536,919 | - |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியினை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134(i) இற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது. | வருமானங்களை ஈட்டுவதற்கு தாமதமின்றி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பிலுள்ள ரூபா 41,667,849 மீதியினை பயன்படுத்தி 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அத்தியாயம் IV இன் 108 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தாமல் வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் சபையினால் வைப்பிலிடப்பட்டிருந்தது. | எதிர்பாராத அனர்த்தம் ஏற்படும் போதும் மற்றும் சில குறித்த தேவைகளுக்கே வைப்பிலிடப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செட்டிகுளம் பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் சூடுவெந்த புலவு கடைத்தொகுதி ஆகியவற்றினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 130,636 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாடகைக்கு வழங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

